Dinamalar (Madurai Edition)
30-1-2013

# கொடைக்கானல் விஞ்ஞானிக்கு 'சிறந்த பேராசிரியர்' தேசிய விருது

கொடைக்கானல், ஜன.30-

கொடைக்கானல் விண்இயற்பியல் ஆய்வு மைய தலைமை விஞ்ஞானி கே.சுந்தரராமனுக்கு, சிறந்த பேராசிரியருக்கான தேசிய விருது வழங்கப்படுகிறது.

கொடைக்கானலில் 1899 ஏப்.,1 முதல் விண்இயற்பியல் ஆய்வு மையம் செயல்பட்டு வருகிறது. இங்கு சூரியனைப்பற்றிய ஆய்வு முக்கியமாக நடத்தப்படுகிறது. மைய தலைமை விஞ்ஞானி கே.சுந்தரராமன் நிருபர்களிடம் கூறியதாவது:

கொடைக்கானல் விண்இயற்பியல் ஆய்வு மையத்தில் ஆண்டுதோறும் மே மாதத்தில் விண்ணியல் பற்றிய உயர்கல்விக்கான பயிற்சி அளிக்கப் படுகிறது. பி.இ., பி.டெக்., எம்.எஸ்.சி., மற்றும் பி.எச்.டி., பயிலும் மாணவர்கள் இந்த பயிற்சியில் பங்கேற்கிறார்கள்.

அமெரிக்கா உள்ளிட்ட பல வெளி நாடுகளில் இருந்தும் பி.எச்.டி., மாணவர்கள், குறுகிய கால பயிற்சிக்காக இங்கு வருகின்றனர். இந்திய- அமெரிக்க உயர்கல்வி மாநாடு, ஆந்திர அரசு சார்பில், ஐதராபாத்தில், வரும் பிப்., 1 முதல் 3 வரை நடக்கிறது.

அமெரிக்க, இந்திய விஞ்ஞானிகள், உயர்கல்வி இருநாடுகளிலும் எவ்வாறு அளிக்கப்படுகிறது என விவாதிக்க உள்ளனர். வெளிநாடுகளில் (குறிப் பாக அமெரிக்காவில்) உயர் கல்வி பயில விரும்பும் மாணவர்களுக்கு, இம்மா நாடு பயன்படும். மாநாடு குறித்த விபரங்களை, www.indus.org என்ற இணை யதளத்தில் தெரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

★ இம்மாநாட்டில் விஞ்ஞானி சுந்தர ராமனுக்கு சிறந்த பேராசிரியருக்கான தேசிய விருது வழங்கப்படுகிறது.

**சூரியப்புயல்:** சில ஆண்டிற்கு முன் 'சூரியப்புயல்' குறித்து செய்த ஆய்வுக்காக தமிழக அரசின் விருது பெற்றுள்ளார். இவரை, 'சூரியப் புயல்' விஞ்ஞானி என அழைக் கின்றனர்.

**சூரியப்புயல் என்றால் என்ன.**

சூரியனின் தென்கிழக்குப் பகுதியில், ஒரு சூரிய புள்ளிக்கூட்டம் உருவாகியுள்ளது. மையப்பகுதியில் இரண்டு புள்ளிக்கூட்டம் தென்



கே.சுந்தரராமன்

படுகிறது. இந்த சூரியப் புள்ளிகளால் காந்தப்புயல் உருவாகும்போது, அது சூரிய புயல் எனப்படுகிறது.

**சூரியப்புயல் உருவானால் பூமிக்கு பாதிப்பா.**

சூரியனுக்கும் பூமிக்கும் இடையே உள்ள தூரம் சுமார் 15 கோடி கி.மீ., எனவே, சூரியப்புயல் உருவாகி, அது பூமியின் காந்தப்புலத்தை ஊடுருவ பல மணி நேரமாகும். அப் படியே ஊடுருவினாலும், மனிதர்களுக்கு பாதிப்பு இருக்காது. வட மற்றும் தென் துருவங்களுக்கு அருகில் உள்ள நாடுகளில் உள்ள மின் நிலையங்கள், தகவல் தொழில்நுட்ப சாதனங்களை பாதிக்கச்செய்யும். சில நேரங்களில் செயற்கைக்கோள்களும் பாதிக்கும் வாய்ப்புள்ளது.

**இந்தியாவை பாதிக்குமா.**

நமது நாடு, பூமத்திய ரேகைக்கு அருகில் இருப்பதால் இந்தியாவை துளிகூட பாதிக்காது. இந்தியாவைப் போன்றே, பூமத்திய ரேகைக்கு அரு கில் உள்ள நாடுகளையும் பாதிக்காது. இவ்வாறு விஞ்ஞானி கே.சுந்தரராமன் தெரிவித்தார்.